**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, MADURAI**

**M.C.O.P. No.1226/2022**

**P.W.2**

Deposition of Witness for the Petitioner / Respondent Solemnly affirmed by of this Court on **11.07.2025** in accordance with the Provisions of Evidence Act X of 1872.

| | |
|---|---|
| Name மகேஷ்வரன் | Father Name : காளிமுத்து |
| Village : | Taluk : |
| Calling : | Age : |

**மனுதாரர் தரப்பு முதல் விசாரணை :**

நான் மனுவில் மனுதாரர் தரப்பு 2வது சாட்சி ஆவேன். வழக்கு விவரம் தெரியும். நான் எனக்காகவும் மற்ற மனுதாரர்களுக்காகவும் சாட்சியமளிக்கிறேன். எனது தரப்பு முதல் விசாரணை நிருபண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :-**

நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் சரிதான். விபத்து நடந்த ரோடு தென்வடல் ரோடு ஆகும். நான் அய்யனாருக்காக சாட்சியமளிக்க வந்துள்ளேன். நானும் விபத்தில் இறந்து போன அய்யனாரும் உறவுக்காரர்கள் என்றால் சரியல்ல, ஒரே ஊர்க்காரர்கள் என்றால் சரியல்ல. நான் சுமார் 10, 15 அடி தூரத்திலிருந்து விபத்தை பார்த்தேன். இருசக்கர வாகனத்தில் வந்தவர்கள் தெற்கு பக்கத்திலிருந்து வடக்கு பக்கம் வந்தார்கள். விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனம் இருசக்கர வாகனமாகும். இருசக்கர வாகனத்தின் மீது மோதிய வாகனம் சிவப்பு கலர் கார் ஆகும். அந்த காரை நான் 25 அடி தொலைவில் பார்த்தேன். அந்த கார் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்தது. இருசக்கர வாகனத்தில் வந்த நபர் இருசக்கர வாகனத்தை மண் தரையில் நிறுத்தி வைத்துவிட்டு சிறுநீர் கழித்துவிட்டு, மீண்டும் இருசக்கர வாகனத்தில் ஒருவர் ஏறி உட்கார்ந்து கொண்டும், மற்றொரு நபர் உட்காருவதற்காக இருசக்கர வாகனத்தில் ஏற நின்ற போது, மேற்படி கார்

அதிவேகமாக வந்து, நின்றுகொண்டிருந்த மேற்படி இருசக்கர வாகனத்தின் மீது மோதியது. அந்த இருசக்கர வாகனத்திற்கும் காருக்கும் இடையே உள்ள இடைவெளி என்ன என்றால் சுமார் 25 அடி தூரம் இருக்கும், ஆனால் கண் இமைக்கும் நேரத்தில் கார் வந்து இருசக்கர வாகனம் மீது மோதியது. நான் சொல்வது போல் விபத்து நடக்கவில்லை என்றும், நான் விபத்து நடந்த சம்பவத்தை கற்பனையாக சொல்லிக்கொடுத்ததன் பேரில் விபத்தை நேரடியாக பார்க்காமல் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஒரு கற்பனையான சம்பவத்தை பற்றி சொல்வதற்காக ஏற்கனவே சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் இருந்ததை போல நீதிமன்றத்தில் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. இருசக்கர வாகனத்தில் வந்த நபர்கள் தலைக்கவசம் அணிந்திருந்தார்களா என்றால் இருசக்கர வாகனத்தில் முன்புறமாக இருசக்கர வாகனத்தை ஓட்டுவதற்காக இருந்த நபர் தலைக்கவசம் அணிந்திருந்தார். இருசக்கர வாகனத்தை ஓட்டிய நபரின் கவனக்குறைவு தான் இந்த விபத்திற்கு அதிகமான காரணம் என்று சொன்னால் சரியல்ல. நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும், நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –** இல்லை.